ஆர். ராமநாதன்

# தியாகச் சின்னம்

சக்தி

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
6 JAN 1948
MADRAS

O-,2NRN4,T
N47
103775

# தியாகச் சின்னம்

[மைசூர் விடுதலைப் போரைச்
சித்தரிக்கும் ஒற்றையங்க நாடகம்]

ஆர். ராமநாதன்
எழுதியது

சக்தி காரியாலயம்
ராயப்பேட்டை, சென்னை 14.

விற்பனை உரிமை:
பொன்னெழுத்துப் பொறிப்பகம்,
குடியாத்தம்

முதற் பதிப்பு: டிசம்பர், 1947.

எல்லா உரிமைகளும் ஆசிரியருக்கு

விலை பன்னிரண்டு அணா

ARCHIV

Printed by Shakti Press Ltd., Royapettah, P.I.C. No. MS. 23.
for Shakti Karyalayam Royapettah, P.I.C. No. MS. 202.

# சமர்ப்பணம்

சுதந்திரப் போரில் உயிர்நீத்த ஊர் பெயர் தெரியாத தியாகிகள், தங்கள் புனிதமான செங்குருதியால் செந்நிறமாக்கின புண்ணிய பூமியில் பசும்புல் முளைத்து விட்டது.

வெண் எறும்புகள் அந்தத் தியாகிகளின் எலும்புகளை அரித்துத் தின்றுவிட்டன! மறதி என்னும் திரை அந்த உத்தமத் தியாகிகளை மறைத்துவிட்டது! சரித்திரம் அந்த வீரர்களை மறந்துவிட்டது!

எங்கும், எக்காலத்திலும், எந்த நிலையிலும் சுதந்திரத்தை வென்றவர்கள் இந்த ஊர் பெயர் தெரியாத தியாகிகள்தான். புகழை வேண்டாத தொண்டர் கூட்டம் இது.

அவர்கள் ஞாபகார்த்தமாக அவர்கள் செந்நிறமாக்கின மண்ணில் நான் ஒரு செம்மலரைச் சமர்ப்பிக்கிறேன். அக்கிரமங்களையும் அநீதிகளையும் சுக்கு நூறாக்கத் துடிக்கும் மனதில் மலர்ந்த மலர் இது.

லாபநஷ்டக் கணக்குப் பார்க்காமல் சுதந்திரப் பாதையில் பிரயாணம் செய்யும் சஹப்பிரயாணிகளே!

இந்த மலர் மணக்கவில்லை என்றாலும் இதை மிதித்து விடாதீர்கள்!

**இது ஒரு காணிக்கை!**

## காட்சி 1

[சென்னையில் கல்லூரி மாணவர்கள் தங்கும் விடுதி.

ரவீந்திரன் அறை. அறையில் புத்தகங்கள் அங்கு மிங்கும் கிடக்கின்றன. அழுக்குத் துணிகள் மூலையில் குவிக்கப்பட்டிருக்கின்றன. சிகரெட் துண்டுகள் சிதறிக் கிடக்கின்றன. சினிமா நட்சத்திரங்களின் படங்கள் சுவரை அலங்கரிக்கின்றன.

ரவீந்திரனும், ரங்கனும் கட்டிலில் உட்கார்ந்திருக்கின்றனர்; கோபியும், ராஜனும் நாற்காலிகளில் வீற்றிருக்கின்றனர்.—]

ராஜன் : எல்லோரும் வந்து விட்டார்கள். ஒரு கை ஆடலாமா?

ரவீந்திரன் : இன்று "கச்சேரி" வேண்டாம், ராஜன்.

ராஜன் : ஏன் ?

ரவீந்திரன் : தினசரி ஆடுகிறோமே! இன்று நமக்கு விடுமுறை !

கோபி: அப்படியானால் சினிமாவுக்குப் போகலாம்.

ரங்கன் : சினிமாவுக்கா ? நல்ல படம் • எங்கே ஓடுகிறது ?

கோபி : எல்லாத் தியேட்டர்களிலும் நல்ல படங்கள் ஓடுகின்றன. பெட்டி டேவிஸ் நடிக்கும் படத்திற்குப் போவோம். அவள் சிறந்த "காரெக்டர் ஆக்ட்ரஸ் !"

ரங்கன் : இன்று ஏன் தமிழ்ப் படத்திற்குப் போகக்கூடாது ?

கோபி : தமிழ்ப் படத்திற்கா ? நீ சரியான பதிலாம் பசலி ! தமிழ்ப் படம் உருப்பட இன்னும் எத்தனை வருடங்கள் ஆகுமோ ? அது வரையில் தமிழ்ப் படம் ஓடும் தியேட்டர் பக்கம் நான் தலை வைத்துக்கூடப் படுக்க மாட்டேன்.

ரங்கன் : ஹிந்திப் படம் என்றால் உனக்கு ரொம்ப குஷி! ஹிந்தி நடிகர்களை விட நம் நடிகர்கள் எந்த வகையில் தாழ்ந்தவர்கள்?

ரவீந்திரன் : தமிழ் நடிகர்கள் சிறந்தவர்களா, ஹிந்தி நடிகர்கள் சிறந்தவர்களா என்ற ஆராய்ச்சியில் நாம் இறங்க வேண்டாம். இதைத் தனித் தமிழர்களுக்கு விட்டு விடுவோம். இன்று ஒரு படத்திற்கும் போக வேண்டாம். எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கிறது.

கோபி : என்ன வேலை?

ரங்கன் : இது தெரியாதா உனக்கு?

[அவன் ரவீந்திரனைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டுகிறான்]

கோபி : எனக்குத் தெரியாது. புதிர் போடாமல் விஷயத்தை நேரடியாகச் சொல்லக் கூடாதா?

ரங்கன் : நான் புதிர் போடவில்லை. நாடறிந்த உண்மையைச் சொல்லுகிறேன்.

கோபி : அந்த நாடறிந்த உண்மை எனக்குத் தெரியாது.

ரங்கன்: அப்படியானால் நீ ஏமாந்த சோணகிரி!

கோபி: என்னைத் திட்ட வேண்டுமானால், வேறு வழியில் திட்டு!

ரங்கன்: ரவீந்திரன் கமலாவை வட்டமிடுவது உனக்குத் தெரியாதா? கலாசாலை மாணவர்களிடையே இது "ஸ்டான்டிங் ஜோக்" ஆச்சே!

கோபி: பழி! இது எனக்குத் தெரியாதே! அப்படியானால் ரவி புளியங் கிளையைத்தான் பிடித்துக் கொண்டு தொங்குகிறான்.

ரவீந்திரன்: வேடிக்கைக்கும் ஒரு எல்லை உண்டு, ரங்கா!

ரங்கன்: நான் உண்மையைத்தான் சொல்லுகிறேன். நேற்று மாலை நீ அவள் பின்னால் இஞ்சி தின்ற குரங்கு மாதிரி நடக்கவில்லையா?

கோபி: என் வீண் தொல்லை? நான் மறந்துவிட்டேன். இன்று காஸினோவில் "வைட் ஸாவேஜஸ்" என்னும் படம் ஓடுகிறது. இது ரொம்ப நல்ல படமாம்!

ராஜன்: "வெள்ளை மிருகங்களை"க் காண நாம் சினிமாவுக்குப் போக வேண்டுமா, என்ன? நாள்தோறும் நாம் எத்தனையோ மிருகங்களைப் பார்க்கிறோமே!

ரங்கன்: வெள்ளை மிருகங்களை மாத்திரம்தானா பார்க்கிறோம்? நமது நாட்டில் எத்தனையோ கறுப்பு மிருகங்களை நாம் காணவில்லையா? பாஞ்சாலத்திலும், ஹைதராபாத்திலும் மைசூரிலும் எத்தனை மிருகங்கள் இருக்கின்றன!

ரவீந்திரன்: நாளைய தினம் சினிமாவுக்குப் போவோம்.

கோபி: நாளையதினம் காலேஜ் உண்டே!

ரவீந்திரன்: நாளையதினம் "ஸ்டிரைக்." இது தெரியாதா உனக்கு?

கோபி: எதற்காக?

ரவீந்திரன்: மைசூர் மக்களுக்கு ஆதரவு காட்டுவதற்காக நாளையதினம் "ஸ்டிரைக்" செய்ய வேண்டும் என்று கோரி மாணவர் சங்கங்கள் அறிக்கை விடுத்திருக்கின்றன.

கோபி: பருத்தி புடவை காய்த்தமாதிரி, போயேன்! அவர்கள் பெயரைச் சொல்லிக் கொண்டு ஒரு நாள் ஊர் சுற்றலாம்!

ரங்கன்: நீங்கள் மனிதனை உருப்பட விடமாட்டீர்கள். பீச்சுக்காவது போகலாம், வாருங்கள்.

[எல்லோரும் பீச்சுக்குப் போகிறார்கள்.]

.... திரை ....

## காட்சி 2

[கலாசாலை "ஹாஸ்டலில்" ஒரு அறை. ரவீந்திரன் சிந்தனையில் ஆழ்ந்த வண்ணம் உட்கார்ந்திருக்கிறான். அவன் மனம் திக்குத் திசை தெரியாமல் அங்கு மிங்கும் பாய்ந்து செல்கிறது. கமலாவின் சுந்தர வதனம் அடிக்கடி அவன் மனக் கண்முன் தோன்றி மறைகிறது. கமலாவைச் சந்தித்துப் பேச அவனுக்கு ஆசை. அவன் அறையிலிருந்து வேளியேறுகிறான்.

கமலாவின் வீடு. ரவீந்திரன் மெதுவாகக் கதவைத் தட்டுகிறான். கமலா கதவைத் திறக்கிறாள்.]

கமலா: யார்? ரவீந்திரனா? உள்ளே வாருங்கள். ஏது இவ்வளவு தூரம்?

[கமலா உள்ளேபோகிறாள். ரவீந்திரன் அவளைப் பின் தொடர்ந்து போகிறான்.

கமலாவின் அறை. சுவரில் காந்திஜி, ஜவஹர், ஹேமு கலானி முதலியோர் படங்கள் மாட்டப்பட் டிருக்கின்றன. அறைக்கு மத்தியில் இருக்கும் மேஜைமீது கோல்வாலா, ஹேமு கலானி ஆகியோரின் படங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன.]

கமலா: இங்கே உட்காருங்கள். நான் உள்ளே சென்று காப்பி கொண்டு வருகிறேன்.

ரவீந்திரன்: வேண்டாம் கமலா. நான் வரும் பொழுது காப்பி குடித்துவிட்டுத்தான வந்தேன்.

கமலா: பரவாயில்லை. இன்னொரு கப் காப்பி குடிப்பதால் உங்களுக்கு ஒன்றும் நேர்ந்து விடாது. ஒரு நிமிடத்தில் வந்துவிடுகிறேன்.

கமலா போகிறாள். ரவீந்திரன் சுவரில் மாட்டி இருக்கும் படங்களை மாறி மாறிப் பார்க்கிறான்.

கமலா காப்பியுடன் திரும்பிவருகிருள். காப்பிக் கோப்பையை மேஜைமீது வைத்து விட்டு அவளும் ஒரு நாற்காலியில் உட்காரு கிருள்.]

கமலா: என்ன ரவீன்? என்னுல் ஆகவேண்டிய காரியம் ஏதாவது இருக்கிறதா?

ரவீந்திரன்: விசேஷம் ஒன்றுமில்லை. சும்மா உங்களைப் பார்த்துவிட்டுப் போகலாம் என்று நினைத்து வந்தேன்.

கமலா: அவ்வளவுதானே! நல்லது: இன்றைய பத்திரிகையைப் படித்தீர்களா?

ரவீந்திரன்: இன்னும் படிக்கவில்லை, கமலா! அது போகட்டும். உங்களிடம் ஒரு முக்கிய மான விஷயத்தைச் சொல்ல நெடுநாட்களாக முயன்று வருகிறேன். ஆனுல் அதைச் சொல்ல இவ்வளவு காலம் எனக்குத் துணிச்சல் எற்பட வில்லை!

கமலா: சொல்லத் துணிச்சல் ஏற்படாத விஷயம் என்ன இருக்கிறது? பயப்படாமல் சொல்லுங்கள்.

[ரவீந்திரன் விழிக்கிறான்—தயங்குகிறான்.]

கமலா: ஏன் விழிக்கிறீர்கள்? தைரியமாகச் சொல்லுங்கள்! இன்னும் அரை மணி நேரத்தில் நான் வெளியே செல்ல வேண்டும். இன்று மைசூர் சுதந்திரப் போருக்கு ஆதரவு காட்டுவதற்காகக் கூட்டப்படும் ஒரு கூட்டத்தில் நான் பேச ஒப்புக் கொண்டிருக்கிறேன்.

ரவீந்திரன்: உங்களுக்கு உட்கார்ந்து பேசுவதற்குக்கூட அவகாசம் இல்லை!

கமலா: ஆம்; தேசம் இன்றுள்ள நிலையில், தேச மக்களுக்குச் சேவை செய்வதையே தொழிலாகக் கொண்ட எனக்கு உட்கார்ந்து பேச நேரமில்லை!

ரவீந்திரன்: தேசம் உங்கள் தலைமீது நிற்பதைப் போன்று பேசுகிறீர்களே!

கமலா: தேசம் என் தலைமீது நிற்கவில்லை என்பது உண்மைதான். ஆனால், நான் தேசத்தின் ஒரு பகுதி. தேசத்திற்கு நான் செய்யவேண்டிய கடமைகள் சில இருக்கின்றன. தேசம் எல்லோர் சேவையையும் இன்று எதிர்பார்க்கிறது.

கண்ணீராலும், ரத்தத்தாலும் பெற்ற சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இன்று நமக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பொறுப்பைத் தேச நலத்தில் கருத்துள்ளவர்கள் தட்டிக் கழிக்க முடியாதல்லவா? ஆகவே உங்களைப்போன்று உல்லாசமாகத் திரிய எனக்கு நேரமில்லை.

ரவீந்திரன்: தேசத்திற்கு என்ன ஆபத்து நேர்ந்துவிட்டது? நமது நாடு விடுதலைபெற்று விட்டது; காங்கிரஸ் தலைவர்கள் நாட்டை ஆளுகிறார்கள். இன்னும் என்ன வேண்டும்?

கமலா: தேசம் விடுதலை பெற்றுவிட்டது என்பது உண்மைதான். ஆனால் தேசம் இன்னும் பரிபூரண விடுதலை பெறவில்லை என்பதை மறந்துவிடாதீர்கள். ஏகாதிபத்தியத்தின் சின்னங்கள் புதிதாகப் பெற்ற சுதந்திரத்தைப் பறிக்கப் பெரு முயற்சி செய்கின்றன. குடியேற்ற நாட்டு அந்தஸ்து என்னும் சாம்ராஜ்யத்திலிருந்து பரிபூரண சுதந்திரம் என்னும் சாம்ராஜ்யத்திற்கு நாம் செல்வதைத் தடுக்கப் பிற்போக்காளர்கள் "பகீரதப் பிரயத்தனம்" செய்கிறார்கள். அந்த முயற்சியின் விளைவுதான்

வகுப்புக் கலகமும், முதலாளிகளின் தாக்குதலும், மன்னர்களின் கொடுங்கோன்மையும்!

ரவீந்திரன்: நீங்கள் சொல்லுவதொன்றும் எனக்கு விளங்கவில்லை!

கமலா: கண்ணிருந்தும் காணத் தெரியாத திருக்கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் நீங்கள். மைசூரிலும், ஹைதராபாத்திலும் நடப்பது உங்களுக்குத் தெரியவில்லையா? ஹைதராபாத் ஒரு "பேய் வனமாக"த் திகழ்வதை நீங்கள் காணவில்லையா? ஆயிரக்கணக்கான உத்தம தேச பக்தர்கள் சுதந்திரத்திற்காகத் தங்கள் ஆருயிரை நாள்தோறும் அர்ப்பணம் செய்வதை நீங்கள் காணவில்லையா? மைசூரிலே மகத்தான புரட்சி நடப்பதை நீங்கள் காணவில்லையா? முடியாட்சியை அடித்துத் தகர்த்துத் தரைமட்டமாக்க மக்கள் செய்யும் தியாகத்தை நீங்கள் காணவில்லையா?

ரவீந்திரன்: அது சமஸ்தானப் பிரச்னை! அதற்கும் நமக்கும் என்ன சம்பந்தம்?

கமலா: அது சமஸ்தானப் பிரச்னை மாத்திரம் அல்ல; அது இந்தியாவின் பிரச்னை. ஆகஸ்டு

பதினைந்தாம் தேதி அடிமைச் சங்கிலியை உடைத்த நாம், நமது எதிர் காலத்தை அச்சுறுத்தும் முடியாட்சியை வீழ்த்த வேண்டும். ஏனெனில் வெறுக்கத்தக்க முடியாட்சி ஏகாதிபத்தியத்தின் கோட்டை. இதை உணராத வரையில் சமஸ்தான மக்களின் போரின் தன்மையை நம்மால் தெரிந்துகொள்ள முடியாது.

ரவீந்திரன்: நீங்கள் சொல்லுவது எனக்கு உண்மையில் புரியவில்லை. நீங்கள் தேர்ந்த அரசியல்வாதியைப்போன்று பேசுகிறீர்கள். ஆனால், அரசியலுக்கும் எனக்கும் வெகு தூரம்.

கமலா: மைசூரில் நடக்கும் போரின் தன்மையைத் தெரிந்து கொள்ளவும், அந்தப் போரில் நமது கடமை என்ன என்பதைத் தெரிந்து கொள்ளவும் பெரிய அரசியல் ஞானம் தேவை இல்லை. சாதாரண தேச பக்தி அந்தப் போரின் தன்மையை அறிவுறுத்தும்!

ரவீந்திரன்: அரசியல் சிக்கலில் நாம் ஏன் மாட்டிக்கொள்ள வேண்டும், கமலா? அரசியல் சிக்கல்களைச் சிக்கறுக்கும் சிரமமான வேலையை

அரசியல் வாதிகளுக்கு விட்டு விட்டு நாம் ஏன் நிம்மதியாக வாழக்கூடாது?

கமலா: இதன் அர்த்தம்?

ரவீந்திரன்: நான் பணக்காரக் குடும்பத்தில் பிறந்தவன். என் தந்தைக்கு ஏராளமான சொத்து இருக்கிறது. நான் அவருக்கு ஒரே புதல்வன். வாழ்க்கை இன்பம் முழுதையும் அனுபவிக்கப் போதிய செல்வம் எனக்கு இருக்கிறது. வாழ்க்கைச் சக்கரம் உல்லாசமாகச் சுழலத் தேவையான எல்லாம் எனக்கு இருக்கின்றன. ஆனால்............

[அவன் தயங்குகிறான்]

ரவீந்திரன்: ஆனால், ஒரே ஒரு குறை. வாழ்க்கை இன்பத்தை அனுபவிக்க எனக்கு ஒரு துணைவி தேவை!

கமலா: இதைச் சொல்ல இவ்வளவு தயக்கம் ஏன்? உங்களிடம் பணம் இருக்கிறது. இன்றைய சமூகத்தில் பணக்காரன் எத்தனை பெண்களை வேண்டுமானாலும் விலைக்கு வாங்கலாமே! மார்க்கெட்டில் கிடைக்கும் பெண் உங்கள் வாழ்க்கையை அலங்கரிப்பாள்!

ரவீந்திரன் : நீ சொல்லுவது வாஸ்தவம்தான். (ஆனல்)என் மனம் ஒரு மாதரசியை மாத்திரம் தான் நாடுகிறது. அவளை மணக்க நான் விரும்புகிறேன்.

கமலா : அந்தப் பாக்கியசாலி யார்?

[கமலா சிரிக்கிருள்]

ரவீந்திரன் : ஏன் சிரிக்கிறீர்கள்? என் முன் நிற்பவர் தான் அந்த மாதர் திலகம்!

கமலா : விளையாடாதீர்கள், ரவீன்.

ரவீந்திரன் : நான் விளையாடவில்லை, கமலா. இத்தனை நாட்கள் இந்த உண்மையை உங்களிடம் சொல்ல என் மனம் துணியவில்லை. இன்று தான் எனக்குத் துணிச்சல் ஏற்பட்டது. எனக்கு ஏராளமான சொத்து இருக்கிறது. நீங்கள் என்னை மணந்தால் உங்கள் வாழ்க்கையை நான் சுவர்க்க வாழ்க்கை ஆக்குவேன். தங்களை இன்ப லோகத்திற்கு நான் அழைத்துச் செல்வேன்.

கமலா : உங்கள் தந்தை சேமித்துவைத்த செல்வத்தைக்கொண்டு என்னை விலைக்கு வாங்கப்

போகிறீர்கள் அல்லவா? என்னை விலைக்கு வாங்கி, என்னை உங்கள் வேலைக்காரியாக்கப் போகிறீர்கள் அல்லவா? என்னை விலைக்கு வாங்கி, என்னை வெறும் பிள்ளைபெறும் யந்திரமாக்கப் போகிறீர்கள் அல்லவா? பழமை என்னும் அதல பாதாளத்தில் என்னைத் தள்ளப் பார்க்கிறீர்கள் அல்லவா?

ரவீந்திரன்: நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? நீங்கள் எனக்கு அடிமைப்பட வேண்டும் என்று நான் சொன்னேன்? நீங்கள் அரசியலிலிருந்து விலகி, என்னுடன் கை கோர்த்துக்கொண்டு வாழ்க்கைப் பிரயாணத்தை நடத்தவேண்டும் என்றுதான் நான் சொல்லுகிறேன்.

கமலா: தங்கள் வாழ்க்கைக்கும் என் வாழ்க்கைக்கும் மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசம் இருக்கிறது. ஆனால், இதை நீங்கள் தெரிந்து கொள்ளவில்லை. உங்கள் வாழ்க்கைத் துணைவியாக, வீட்டுப் பூச்சியாக நான் வாழ வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள்; நான் எந்த நோக்கம் நிறைவேறுவதற்காகப் பாடுபடுகிறேனோ, அந்த நோக்கத்திற்கு விடை கொடுத்துவிட வேண்டும் என்று சொல்லுகிறீர்

கள்! நான் லட்சியப் பாதையிலிருந்து சறுக்கி விழுந்துவிட வேண்டும் என்று சொல்லுகிறீர்கள்! என்னை நீங்கள் சரியாகப் புரிந்துகொள்ள வில்லை என்பதைத்தான் இது எடுத்துக் காட்டுகிறது. அரசியல் என் ஜீவன்; பொதுஜன சேவை என் வாழ்க்கையின் லட்சியம். இந்த உண்மையை இது வரையில் நீங்கள் தெரிந்து கொள்ளாதது வருந்தத் தக்கது.

ரவீந்திரன்: அப்படியானல் என் காதல்? என் காதல் வாடி வதங்கத்தான் வேண்டுமா?

கமலா: உங்கள் காதல் வாடி வதங்கவேண்டும் என்று நான் சொல்லவில்லை! ஆனல், இப்பொழுது காதலைப்பற்றிப் பேச எனக்கு நேரமில்லை. மைசூரிலே புரட்சித் தீ கொழுந்து விட்டு எரியும்பொழுது, பால் மணம் மாருச் சிறுவன் நஞ்சப்பா துப்பாக்கிக் குண்டுக்கு இரையான செய்தியைக் கேட்டபிறகு, நஞ்சுடேச்வர கௌடா போலீசாரின் குண்டாந் தடிக்குப் பலியான பிறகு, கோலார் தங்க வயல் தொழிலாளர்கள் மிருகத்தனமான அடக்குமுறையை எதிர்த்துப் போர் புரியும் உணர்ச்சி ஊட்டும் செய்தியைக் கேட்டபிறகு,

போர்க்களத்தின் முன்னணியில் நிற்கும் மாதரசிகளின் மகத்தான தியாகத்திற்குப் பிறகு, காதலைப்பற்றி உங்களிடம் விவாதிக்க எனக்கு நேரமில்லை. விடுதலைப் போர் நம்மை அறைகூவி அழைக்கிறது; எண்ணற்ற தியாகிகளின் வீரக் குரல் நம்மை விடுதலைப் போர்க் களத்திற்கு அழைக்கிறது.

ரவீந்திரன்: அப்படியானால் என் காதல் கருக வேண்டுமென்று சொல்லுகிறீர்களா?

கமலா: உங்கள் காதல் கருக வேண்டாம். ஆனால், என் காதல் வேறுவிதமானது! நான் மனக் கண்ணால் காணும் காதலன் வேறு விதமானவன். விடுதலைப் போர்க் களத்தின் முன்னணியில் நிற்கும் சுதந்திர வீரனை நான் காதலிப்பேன்! அடிமைத் தனத்தையும், கொடுமையையும் தீரத்துடன் எதிர்ப்பவனுடன் நான் கை கோர்த்துக்கொண்டு வாழ்க்கைப் பிரயாணம் செய்வேன். உன்னதமான நோக்கம் நிறைவேறுவதற்காக எந்தகைய தியாகம் செய்யவும் தயங்காத லட்சிய வீரனை நான் ஏற்றிப் போற்றுவேன்! வாழ்க்கையை வீணாக்கும் சோம்பேறியை நான் திரும்பியும் பார்க்க

மாட்டேன்! ஆனால், சமுதாயத்தின் நன்மைக்காக வாழ்க்கையைப் பயன்படுத்தும் வீரனை நான் மதிப்பேன்—அவனுக்கு நான் துணையாக நிற்பேன். தன்னை அழகு படுத்திக் கொண்டு உல்லாசமாக அலைந்து திரிபவனை நான் மதியேன்! ஆனால், கடமை உணர்ச்சியுடன் செயலாற்றுகிறவனை நான் பூஜிப்பேன். இத்தகைய வீரனை நான் காதலிப்பேன்; இத்தகைய வீரனுடன் எத்தகைய துன்பத்தை வேண்டுமானாலும் அனுபவிப்பேன்.

ரவீந்திரன்: இப்படிப்பட்ட ஒரு லட்சிய புருஷனாக, கர்ம வீரனாக நான் மாறமாட்டேன் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

கமலா: அப்படி நான் சொல்லவில்லையே! நிச்சயமாக நீங்கள் ஒரு லட்சிய புருஷனாக மாறுவீர்கள். ஆனால், ஒன்றுதான் அதற்குக் குறுக்கே நிற்கிறது. அதுதான் உங்கள் சோம்பலும் பயனற்ற வாழ்க்கையும். இந்தத் தீமைகளுக்கு நீங்கள் விடை கொடுத்தால், சமுதாயத்தில் நீங்கள் முதலிடம் பெறுவீர்கள்.

ரவீந்திரன்: (புன்னகையுடன்) பங்களூர் மெயில் எத்தனை மணிக்குப் புறப்படுகிறது, கமலா?

[கமலா அவனை இமை கொட்டாமல் பார்க்கிருள். அவளுக்கு எல்லாம் விளங்கி விடுகிறது. அவள் புன்னகை புரிகிருள், பெருமையுடன், ரவீந்திரனும் புன்னகை புரிகிருன்.

சுவரில் மாட்டப்பட்டிருக்கும் கமலாவின் போட்டோ அவன் கண்ணில் படுகிறது. அவன் அதை எடுக்கிருன், புன்னகை புரிந்து கொண்டு]

கமலா: அவசரப்படாதீர்கள்! அந்தப் படத்திற்கு விலை கொடுக்க வேண்டும். அதை இனமாக எடுத்துக்கொண்டு போய்விடலாம் என்று நினைத்தீர்களா?

ரவீந்திரன்: அதற்கு என்ன விலை வேண்டுமானலும் கொடுக்கத் தயார்!

கமலா: உங்கள் போட்டோவைக் கொடுத்து விட்டு என் போட்டோவை எடுத்துக் கொள்ளுங்கள்! அதுதான் விலை!

[கமலா புன்னகை புரிகிருள். ரவீந்திரன் அவளைப் பார்த்துப் புன்னகை புரிந்து விட்டு, தனது போட்டோவை

மேஜையின் ஓரத்தில் வைக்கிறான். அந்த மேஜை மீது கோல்வாலாவின் படமும், ஹேமு கலானியின் படமும் வைக்கப்பட்டிருக்கின்றன.

அந்தப் போட்டோவை எடுத்து, ஹேமு கலானியின் படத்திற்கும் கோல்வாலாவின் படத்திற்கும் மத்தியில் வைக்கிறாள் கமலா.]

கமலா: உங்கள் ஸ்தானம் இனிமேல் இதுதான். நான் ஏற்றிப் போற்றுகிறவர்களுக்கு மத்தியில் உங்கள் படத்தை வைத்துவிட்டேன்; தியாகிகளின் ஸ்தானத்திற்கு நான் நேசிப்பவரையும் உயர்த்தி விட்டேன். இரவு ஸ்டேஷனில் சந்திக்கிறேன்.

ரவீந்திரன்: ஸ்டேஷனில் சந்திப்போம்.

.... திரை ....

## காட்சி 3

[கோலார் தங்கவயல். மைசூர் மைன்ஸ் தொழிலாளியின் குடிசை. ஒரு மூலையில் ரவீந்திரன் உட்கார்ந்திருக்கிறான். அவனுக்கு அருகில் வீற்றிருக்கிறான் சுரங்கத் தொழிலாளி ராமசாமி.]

ராமசாமி: இயக்கத்தின் வேகம் நாள் தோறும் அதிகரிக்கிறது. பத்ராவதி, ஷிமுகா, சித்தல் துர்க், ஹாஸன், பங்களூர் முதலிய இடங்களில் யுகப் புரட்சி நடக்கிறது. மைசூரிலும், பங்களூரிலும் மாணவர்கள் போர்க்களத்தில் குதிக்கிறார்கள். ஊரடங்குச் சட்டத்தை மீறி மாணவர்களும், பெண்களும் ஊர்வலங்கள் நடத்துகிறார்கள். சர்க்கார் நிலைகுலைகிறது.

ரவீந்திரன்: எல்லா அரசியல் கட்சிகளும் ஒன்று சேர்ந்து போர் புரிவது மைசூர் சமஸ்தான மக்கள் போரின் விசேஷ அம்சம். மக்கள் ஒன்றுபட்டுப் போர் புரிந்தால் முடியாட்சி எத்தனை நாட்கள் நிலைத்திருக்கும்? மகுடம் மண்ணில் உருளும் நாள் வெகு தூரத்தில் இல்லை!

ராமசாமி: கோலாரில் நிலைமை தலை கீழாக மாறி வருகிறது. மைசூர் மைன்ஸ் தொழிலாளர்களும், சாம்பியன் ரீப் தொழிலாளர்களும் போர்க்களத்தில் குதிக்கத் தயாராக இருக்கிறார்கள். எந்த நிமிடத்திலும் அவர்கள் அரசியல் வேலை நிறுத்தம் செய்வார்கள். பங்களூர் தொழிலாளர்களும், பத்ராவதி தொழிலாளர்களும், போர்க் கொடியை உயர்த்தி விட்டார்கள். ரயில்வே தொழிலாளர்களிடையே உற்சாகம் பொங்கி வழிகிறது! எனினும்........

[கதவைத் தட்டும் சத்தம் கேட்கிறது. ராமசாமி கதவைத் திறக்கிறான். ஒரு தொண்டன் உள்ளே பிரவேசிக்கிறான். அவன் ராமசாமியிடம் ஒரு கடிதத்தைக்

கொடுக்கிறான். ராமசாமி கடிதத்தைப் படிக்கிறான்!—]

" நண்ப,

உணர்ச்சியும், உற்சாகமும், நம்பிக்கையும் அளிக்கும் சம்பவங்கள் இங்கே நடக்கின்றன. இன்று காலையில் ஜனங்கள் ராணுவத்தை எதிர்த்து நேரடியாகப் போர் புரிந்தார்கள். வீதி அடைப்புகள் அமைத்து (Barricades) ஜனங்கள் நடத்தின போரைக் காண உண்மையில் ஆயிரம் கண்கள் வேண்டும்! இந்தப் போரில் நாம் சில வீரர்களை இழந்தோம். எனினும், முதல் கைகலப்பிலேயே நாம் வெற்றி பெற்ருேம். போலீசார் புறமுதுகிட்டு ஓடினர்! உற்சாகம் கரை புரண்டு ஓடுகிறது. இந்தப் போரை நாம் விரிவு படுத்த வேண்டும்; புதிய போர் முறைகளைக் கையாள வேண்டும். எனவே, இரண்டு தேர்ந்த ஊழியர்களை உடனே அனுப்புக!")

[ரவீந்திரன் யோசிக்கிறான். மகிழ்ச்சிக் குறி அவன் முகத்தில் நர்த்தன மாடுகிறது.]

ராமசாமி: என்ன யோசிக்கிறீர்கள்?

ரவீந்திரன்: யாரை அனுப்பலாம் என்று யோசிக்கிறேன்.

ராமசாமி: மாணிக்கத்தை அனுப்பலாம். அவர் தேர்ந்த புரட்சிக்காரர்.

ரவீந்திரன்: நண்ப! நாளையதினம் மாணிக்கத்தை அனுப்புவதாக விஜயனிடம் சொல்லுங்கள்.

(தொண்டன் போகிறான்)

ராமசாமி: ரயில்வேத் தொழிலாளர் ஒற்றுமையைக் குலைக்கப் பெருமுயற்சி செய்கிறார் திவான். சில தொழிலாளர் தலைவர்களை விலைக்கு வாங்கவும் அவர் முயற்சி செய்கிறார். இந்த முயற்சியை நாம் முறியடிக்க வேண்டும். உடனே ரயில்வேத் தொழிலாளர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்க வேண்டும். ஒற்றுமையை வலியுறுத்தி ஒரு துண்டுப் பிரசுரம் எழுதுங்கள். அதை இரவிலேயே அச்சிட்டு விடுகிறேன்.

[ரவீந்திரன் எழுதுகிறான்]

"தோழர்களே,

பத்து நாட்களாக ஒற்றுமையுடனும், உறுதியுடனும் போராடும் உங்களை நாங்கள்

பாராட்டுகிறோம். இந்த ஒற்றுமையும், உறுதியும் நிலைத்திருக்க வேண்டும்; ஒற்றுமையிலே நீங்கள் வெற்றி காணவேண்டும்.

உங்கள் அணியை உடைக்கப் பெரு முயற்சி செய்கிறது சர்க்கார். உங்கள் தலைவர்களில் சிலரை அதிகாரிகள் விலைக்கு வாங்கி இருக்கிறார்கள். போலித் தலைவர்களின் பேச்சைக் கேட்டு ஏமாந்துவிடாதீர்கள்.

மைசூர் மக்கள் உங்களுக்குப் பின்னே நிற்கிறார்கள்; இந்தியத் தொழிலாளர்களும் பொது ஜனங்களும் உங்களை ஆதரிக்கிறார்கள். இந்த ஆதரவு உங்களுக்குப் புதிய சக்தி அளிக்கட்டும்.

உங்கள் போர் நியாயமானது. எனவே, உங்கள் போர் நிச்சயம் வெற்றி பெறும். தளர்ந்து விழுந்துவிடாமல் வெற்றிப் பாதையில் வீரத்துடன் முன்னேறுங்கள்!

போராட்டக் கமிட்டி.

ராமசாமி: நோட்டீஸைத் திருத்தி எழுதினுல் நலம். போராட்டம் நடக்கும்பொழுது உணர்ச்சி ஊட்டும் பிரசுரம் எழுதவேண்டும்.

ரவீந்திரன்: இன்னெரு பிரசுரம் எழுதித் தருகிறேன்.

[ரவீந்திரன் எழுதுகிருன், வேகமாக. அவன் நோட்டீஸை எழுதி முடித்துவிட்டு, அதைப் படிக்கிருன்]

நெருப்பாற்றிலே குதித்து எதிர் நீச்சு நீந்தும் ரயில்வேத் தொழிலாளர்களை நாம் வாழ்த்துகிருேம்; மிருகத்தனமான அடக்கு முறையை ஏவிவிட்டு, தொழிலாளி வர்க்கத்தின் முதுகெலும்பை முறிக்க முயலும் கொடுங்கோன்மையை வெற்றிகரமாக எதிர்த்து நிற்கும் ரயில்வேத் தொழிலாளர்களை நாம் பாராட்டுகிருேம்.

அடக்குமுறையாலும், கொடுமையாலும் தொழிலாளி வர்க்கத்தை நசுக்கிவிட முடியாது என்பதை அனுபவத்தில் உணர்ந்த சர்க்கார், தந்திரத்தின் மூலமும் சூழ்ச்சியின் மூலமும் தொழிலாளி வர்க்கத்தை முறியடிக்க முயலுகிறது.

கொள்கைப் பிடிப்பு இல்லாத சில தலைவர்களை சர்க்கார் விலைக்கு வாங்கி இருக்கிறது. விலைக்கு வாங்கப்பட்ட தலைவர்களின் உதவியுடன் உருக்குப் போன்ற தொழிலாளர் ஐக்கிய முன்னணியை உடைக்க சர்க்கார் முயலுகிறது. இந்த முயற்சியை நாம் முறியடிக்க வேண்டும்; ஜீவனைக் கொடுத்தாவது ஒற்றுமையைப் பாதுகாக்க வேண்டும். இந்த முயற்சியில் நாம் எவ்வளவு தூரம் வெற்றிபெறுகிறோம் என்பதைப் பொறுத்திருக்கிறது நமது முடிவான வெற்றி!

இவ்வளவு நாட்கள் நீங்கள் தீரத்துடன் போராடினீர்கள்; இவ்வளவு நாட்கள் நீங்கள் கஷ்ட நஷ்டங்களை அனுபவித்தீர்கள். இறுதிவரையில் இந்த உறுதி நீடித்து நிற்க வேண்டும்; முடிவான வெற்றி கிடைக்கும் வரையில் தளர்ச்சியின்றிப் போர் புரிவோம் என்று நீங்கள் சபதம் எடுக்க வேண்டும்...

ராமசாமி: போதும்; இந்த நோட்டீஸ் நன்றாக இருக்கிறது. இதை உடனே அச்சிட ஏற்பாடு செய்கிறேன்.

[அவன் அடுத்த அறைக்குப் போகிறான். உடனே, கதவைத் தட்டும் சத்தம் கேட்கிறது. ராமசாமி கதவைத் திறக்கிறான். ஒரு தொண்டன் உள்ளே பிரவேசிக்கிறான். ராமசாமி கதவைச் சாத்துகிறான்.]

ராமசாமி: நேற்று வருவதாகச் சொன்னீர்களே!

தொண்டன்: நேற்று வர முடியவில்லை. அரண்மனை சத்தியாக்கிரகம் ஜோராக நடப்பதால் போலீஸார் கண்காணிப்பு கடுமையாக இருக்கிறது. நேற்றிரவு என்னை ஒரு துப்பறிபவன் பின் தொடர்ந்தான். அவனிடமிருந்து தப்புவதற்காக இரவு முழுவதும் நான் நடக்க நேர்ந்தது.

ரவீந்திரன்: அரண்மனை சத்யாக்கிரகம் எப்படி நடக்கிறது?

தொண்டன்: நாங்கள் எதிர் பார்த்ததை விட நன்றாக நடக்கிறது. சிப்பாய்களின் வியூகத்தைப் பிளந்து கொண்டு கணக்கற்ற தொண்டர்கள் மைசூரில் பிரவேசித்திருக்கிறார்கள். நாள்தோறும் ஆண்களும், பெண்களும் ஊர்

வலமாக அரண்மனை வாயிலுக்குச் செல்லு கிறார்கள். சிப்பாய்கள் அவர்களை நையப் புடைக்கிறார்கள். எனினும், ஜனங்களின் உற்சாகம் அதிகரித்திருக்கிறது. அடக்குமுறை ஜனங்களின் உணர்ச்சிக்குத் தாளிடவில்லை. இன்னொன்று........

ரவீந்திரன்: என்ன?

தொண்டன்: அரண்மனைக்கு ஜலம் சப்ளை செய்வதற்காக ஒரு குழாய் அமைத்திருக்கிறார்கள். நேற்று நள்ளிரவில் மூன்று சிறுவர்கள் அந்தக் குழாய் வழியாக அரண்மனையில் பிரவேசித்தார்கள். வாசல் வழியாகத்தான் தொண்டர்கள் வருவார்கள் என்று நினைத்த சிப்பாய்கள் நான்கு அரண்மனை வாயில்களையும் காவல் காத்துக் கொண்டிருந்தார்கள். ஆகவே, குழந்தைகள் அரண்மனைக்குள் பிரவேசித்தது சிப்பாய்களுக்குத் தெரியவில்லை. குழந்தைகள் கொடி மரத்தை அடைந்தார்கள். பொழுது புலர்ந்ததும் குழந்தைகள் மைசூர் கொடியை இறக்கிவிட்டு, அசோகன் சக்கரம் பொறித்த மூவர்ணக் கொடியை ஏற்றினார்கள். பிறகு மூவரும் விடுதலைக் கீதம் பாடினார்கள்.

பாட்டைக் கேட்டுத் திரும்பிப் பார்த்த சிப்பாய்கள் மூவர்ணக் கொடி கம்பீரமாகப் பறப்பதைக் கண்டார்கள். ஆத்திரம் கொண்ட சிப்பாய்கள் கொடி மரத்தைச் சுற்றி நின்ற குழந்தைகளை மிருகத்தனமாகத் தாக்கினார்கள். அந்தக் குழந்தைகள் ஆஸ்பத்திரியில் இருக்கிறார்கள். அவர்கள் நிலை கவலைக்கு இடம் அளிக்கிறது.

ரவீந்திரன் : இந்த உற்சாக மூட்டும் சம்பவத்தைச் சித்தரித்து உடனே ஒரு துண்டு பிரசுரம் எழுத வேண்டும். இந்தக் குழந்தைகளின் மாசு மறுவற்ற தியாகம் மக்களைத் தட்டி எழுப்பட்டும்.

[மீண்டும் கதவைத் தட்டும் சத்தம் கேட்கிறது. ராமசாமி கதவைத் திறக்கிறான். இன்னொரு தொண்டன் உள்ளே பிரவேசிக்கிறான். அவன் ரவீந்திரனிடம் ஒரு துண்டுப் பிரசுரத்தைக் கொடுக்கிறான். ரவீந்திரன் அதைப் படிக்கிறான்.]

“மகாஜனங்களே,

மைசூர் மக்கள் விடுதலைப் போரின் சரித்திரத்தை அலங்கரிக்கும் சம்பவம்

நாளைய தினம் நிகழப்போகிறது. சென்னையி லிருந்து வந்திருக்கும் பெண்கள் நாளைய தினம் சத்தியாக்கிரகம் செய்வார்கள். ஸ்ரீமதி கமலா தலைமையில் நாளைய தினம் மாலை ஐந்து மணிக்கு காட்டன்பேட்டையி லிருந்து ஊர்வலம் புறப்படும்......

[ரவீந்திரனல் அதற்கு மேல் படிக்க முடிய வில்லை. அவன் படிப்பதை நிறுத்திவிட்டு, அசையாது உட்காருகிருன்.]

ராமசாமி: ஏன் படிப்பதை நிறுத்தி விட்டீர்கள்? கமலாவை உங்களுக்குத் தெரியுமா?

ரவீந்திரன்: அவள் என்னை முந்தி விட்டாள்!

ராமசாமி: நீங்கள் அப்படி நினைக்காதீர்கள்! நீங்கள் செய்யும் வேலையின் தன்மையை இன்னும் நீங்கள் உணரவில்லை. உண்மையில் நீங்கள் இயக்கத்தின் ஜீவநாடி என்பதை மறந்து விடாதீர்கள். தலைவர்களை இழந்த மக்களுக்கு நீங்கள் தலைமை தாங்குகிறீர்கள். இயக்கத்தை நீங்கள் நேரான பாதையில் நடத்திச் செல்லுகி றீர்கள். இதைவிடப் பெரிய சேவை வேறில்லை.

ரவீந்திரன்: நீங்கள் சொல்லுவது உண்மைதான். அது போகட்டும். நமது தோழர்கள் சிறையி லிருந்து தப்ப ஏற்பாடு செய்தீர்களா?

ராமசாமி: சிறந்த ஊழியர்கள் சிலர் நாளையதினம் சிறையிலிருந்து கம்பி நீட்டுவார்கள். அவர்க ளுக்கு மறைவிடம்கூட ஏற்பாடு செய்திருக்கி றேன்.

ரவீந்திரன்: போலீசாருக்கு மத்தியில் வேலை செய் யும் நம்மவர்கள் எவ்வளவு தூரம் முன்னேறி இருக்கிறார்கள்?

ராமசாமி: அவர்கள் வியக்கத்தக்க முறையில் வெற்றிபெற்றிருக்கிறார்கள். பல இடங்களில் போலீசார் பகிரங்கமாக இயக்கத்தை ஆதரிக்கி றார்கள். பல இடங்களில் நமது தொண்டர்கள் போலீஸ் ஸ்டேஷன்களைக் கைப்பற்றி, போலீ சாரையும் சிறை செய்திருக்கிறார்கள். ஜனங் கள் கிளர்ந்து எழுந்தால், கிளர்ந்து எழும் ஜனங்களை யாரால் தடுத்து நிறுத்த முடியும்?

ரவீந்திரன்: ஆம்; ஜனசக்திக்குத் தலை வணங் காத சக்தி உலகிலேயே இல்லை.

[மீண்டும் கதவைத் தட்டும் சத்தம் கேட் கிறது. ராமசாமி கதவைத் திறக்கிறான். மற்

ஒரு தொண்டன் உள்ளே பிரவேசிக்கிறான். அவன் ரவீந்திரனிடம் ஒரு கடிதத்தைக் கொடுக்கிறான். ரவீந்திரன் கடிதத்தைப் படிக்கிறான்.

"நண்ப,

இங்கே நாங்கள் போட்டி சர்க்காரை ஸ்தாபித்துவிட்டோம். சர்க்கார் அதிகாரிகளும், போலீஸ்காரர்களும் ஊரைவிட்டு ஓடிவிட்டார்கள். இன்னும் பல இடங்களில் போட்டி சர்க்காரை ஸ்தாபிக்க முயன்று வருகிறோம். முழு விவரங்கள் நாளைய தினம் தருகிறேன்."

ரவீந்திரன்: சுதந்திர மைசூரை நாம் அதிவிரைவில் காண்போம்.

ராமசாமி: அகாலமாய் விட்டது. நீங்கள் படுத்துக் கொள்ளுங்கள். நான் நண்பர்களைச் சந்தித்துவிட்டு வருகிறேன்.

[ராமசாமி போகிறான்]

....திரை....

## காட்சி 4

[ஒரு ஹோட்டல். அங்கே பலர் காப்பி குடித்துக்கொண் டிருக்கிருர்கள். ரவீந்திரன் மாறுவேடத்தில் அங்கே வீற்றிருக்கிருன், காப்பி குடித்துக்கொண்டு.

அருகில் இருக்கும் பெஞ்சில் இருவர் வீற்றிருக்கின்றனர். அவர்கள் துப்பறிபவர்கள். அவர்கள் ரவீந்திரனை அடிக்கடி உற்றுப் பார்க்கின்றனர்.

சுவரில் ஒரு நோட்டீஸ் ஒட்டப்பட்டிருக்கிறது:

"இனம்! இனம்!! ரூ. 5,000 இனம்!!!

" ரவீந்திரனை உயிருடனே, அல்லது செத்த பிறகோ பிடித்துக் கொடுப்பவர்களுக்கோ,

அல்லது பிடிக்கத் துப்புச் சொல்லுகிறவர் களுக்கோ ரூ. 5000 இனும் கொடுக்கப் படும்!''

ரவீந்திரனும் நோட்டீஸைப் பார்க்கிறான். அதைப்பார்த்து அவன் புன்னகை புரிகிறான். அருகில் இருப்பவர்கள் தன்னை உற்றுப் பார்ப் பதை ரவீந்திரன் கவனிக்கிறான். அவன் எழுந் திருந்து நடக்கிறான். பெஞ்சில் உட்கார்ந்திருக் கும் இருவரும் அவனைப் பின் தொடரு கின்றனர்.

ரவீந்திரன் வாசற்படியை அடைந்ததும் துப்பறியுவர்களில் ஒருவன் சொல்லுகிறான்:

நீங்கள் யார் என்பது எங்களுக்குத் தெரி யும். உங்களைப் போலீசார் ஊர் முழுதும் தேடு கிறார்கள். ஆனால், நாங்கள் உங்களைப் பிடித்துக் கொடுக்கமாட்டோம். ஏனெனில், நாங்கள் முடி யாட்சியை வெறுக்கிறோம்; எங்கள் நாட்டை நாங்கள் நேசிக்கிறோம். சுதந்திர மைசூர் தோன்ற வேண்டும் என்று நாங்கள் ஆசைப்படு கிறோம்.

இன்னொருவன்: நீங்கள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அதிகாரிகளிடம் நீங்கள் அகப்பட்

டுக் கொண்டால் அவர்கள் உங்களைக் கொன்று விடுவார்கள். நீங்கள் சீக்கிரம் போய் விடுங்கள்!

ரவீந்திரன் : இந்த உதவியை நான் என்றும் மறவேன்.

துப்பறிபவன் : பேசுவதற்கு நேரமில்லை, நாங்கள் எங்கள் கடமையைச் செய்தோம். அவ்வளவு தான்! அதோ ஊர்வலம் வருகிறது. நீங்கள் சீக்கிரம் போய்விடுங்கள்.

[துப்பறிபவர்கள் போகிறார்கள். ரவீந்திரன் வேறு பக்கம் போகிறான்.

வீதியில் சிப்பாய்கள் அணிவகுத்து நிற்கின்றனர். வீதியின் இரு பக்கங்களிலும் பெரிய ஜனக் கூட்டம்.

"மைசூர் மக்கள் விடுதலைப்போர் வெற்றி பெறுக!" என்ற கோஷம் வானைப் பிளக்கிறது.

பெண்களின் ஊர்வலம் வீதியில் வருகிறது. ஜனங்கள் "அடக்கு முறை ஒழிக! பொறுப்பாட்சிப் போருக்கு ஜே!!" என்று கோஷிக்கின்றனர்.

கமலா ஊர்வலத்தை நடத்துகிருள். அவள் பாடுகிருள் :

" * அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்பதில்லையே (அ)
உச்சிமீது வானிடிந்து
வீழுகின்ற போதிலும் (அ)

[துப்பாக்கிகள் சுடுகிருர்கள். கண்ணற்ற குண்டுகள் நாற்புறமும் பாய்கின்றன. ஒரு குண்டு கமலாவுக்கு அருகில் நிற்கும் பெண்ணின் நெஞ்சில் பாய்கிறது. அவள் நெஞ்சிலிருந்து ரத்தம் பெருகி ஓடுகிறது.

தன் கைக்குட்டையை அந்தத் தியாகியின் புனிதமான ரத்தத்தில் தோய்த்து எடுக்கிருள் கமலா. அது அவள் போர்க் கொடி. அந்தக் கொடியை வீசிக்கொண்டு அவள் கம்பீரமான குரலில் பாடுகிருள் :

" * பச்சை யூனி ஐந்து
வேற் படைகள் வந்தபோதிலும்
அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்ப தில்லையே "

---

* பாரதி

[கமலா முன்னேறுகிருள். மீண்டும் குண்டுச் சத்தம்.

கமலா ஜனங்களைப் பார்க்கிருள். ஒரு மூலையில் மாறு வேடத்தில் ரவீந்திரன் நிற்பதை அவள் பார்க்கிருள். குறுநகை அவள் அதரங்களில் பூக்கிறது. பிறகு அவள் சிப்பாய்களைப் பார்க்கிருள். ஒரு துப்பறிபவன் ரவீந்திரனைச் சுட்டிக் காட்டுவதையும், ராணுவ அதிகாரி ரவீந்திரனை நோக்கிக் குறி பார்ப்பதையும் அவள் காண்கிருள். உடனே ராணுவ அதிகாரியை நோக்கி அவள் பாய்கிருள் ; அவன் கையிலிருக்கும் கைத் துப்பாக்கியைத் தட்டுகிருள்.

அருகில் இருக்கும் இன்னொரு ராணுவ அதிகாரி குத்து வாளால் அவள் வயிற்றில் குத்துகிருன்.

" சுதந்திர மைசூர் ! " என்று கோஷித்துக் கொண்டு கமலா கீழே சாய்கிருள்.

ரவீந்திரன் அவளை நோக்கி ஓடுகிருன். அதே சமயத்தில் இன்னொரு பக்கத்திலிருந்து ஓடிவருகிருன் ராமசாமி.]

ராமசாமி: பைத்தியக்காரனைப் போன்று ஏதும் செய்யாதீர்கள். அங்கே சென்ருல், உங்

களையும் அவர்கள் சுட்டு வீழ்த்துவார்கள். உரிய காலத்தில் அந்தத் தியாகியை நாம் வணங்குவோம். நாம் போவோம்!

[ராமசாமியும், ரவீந்திரனும் ஜனக் கூட்டத்தில் மறைகின்றனர். குண்டுகள் அவர்களைப் பின் தொடருகின்றன.]

....திரை....

## காட்சி 5

[திரைக்குப் பின்னிருந்து அறிவிப்பு. மைசூர் மன்னன் பிரகடனம் ரேடியோவில் ஒலி பரப்பப்படுகிறது:

''மைசூர் மகாராஜா இன்று விடுத்திருக்கும் அறிக்கையின் சாரம் வருமாறு:

இன்றுள்ள மந்திரி சபை கலைக்கப்படும்; புதிய மந்திரிசபை உடனே அமைக்கப்படும். காங்கிரஸ் அல்லாத மந்திரிகளை நியமிப்பது சம்பந்தமாக மைசூர் காங்கிரஸ் செய்யும் சிபார்சு ஏற்றுக் கொள்ளப்படும். புதிய மந்திரி சபையில் ஒன்பது மந்திரிகள் இருப்பார்கள். அவர்களில் ஆறு பேர் காங்கிரஸ் மகா சபையைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள்......மந்திரி சபையில் திவானும் அங்கம் வகிப்பார்.

ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட அரசியல் நிர்ணய சபையை புதிய மந்திரிசபை உடனே ஸ்தாபிக்கும். மகாராஜாவின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட பரிபூரண பொறுப்பாட்சியை அடிப்படையாகக் கொண்டு அரசியல் நிர்ணய சபை அரசியல் திட்டத்தை வகுக்கும்.

புதிய அரசியல் திட்டம் 1948-ம் வருடம் ஜுன்மாதம் முதல் தேதி அமுலுக்கு வரும்."

[பிரகடனம் வெளிவந்ததும் ஜனங்கள் சந்தோஷ ஆரவாரம் செய்கின்றனர்.

"சுதந்திர மைசூருக்கு ஜே!" என்று ஜனங்கள் திக்குகள் எட்டும் அதிரக் கோஷிக்கின்றனர்.

அதைத் தொடர்ந்து வெற்றி ஊர்வலம் புறப்படுகிறது. ஊர்வலத்திற்குத் தலைமை தாங்கும் தேச பக்தர் பாடுகிறார் :

"* ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்து
விட்டோமென்று (ஆடு)

---

* பாரதி

எங்கும் சுதந்திரம்
என்பதே பேச்சு—நாம்
எல்லோரும் சமம் என்பது றுதியாச்சு
சங்குகொண்டே வெற்றி
ஊதுவோமே—இதைத்
தரணிக்கெல்லாம் எடுத்தோதுவோமே (ஆடு)

[ஊர்வலம் மைதானத்தை அடைகிறது. அங்கு நடக்கும் பொதுக்கூட்டத்தில் ஒரு தேச பக்தர் பேசுகிறார்:

"சகோதரிகளே, சகோதரர்களே! சரித்திரத்தை அலங்கரிக்கும் புனிதமான நாள் இந்நாள்; நீண்ட நெடுங் காலம் நமது மக்களைப் பிணைத்திருந்த அடிமைச் சங்கிலி அறுந்த நாள். இந்த நாளைச் சாத்தியமாக்கின வீரர்களை நான் வாழ்த்தி வணங்குகிறேன்.

"நாற்பத்திரண்டு நாட்கள் நமது மக்கள் அசாதாரண வீரத்துடன் யதேச்சாதிகாரத்தை எதிர்த்துப் போர் புரிந்தார்கள். சுதந்திரத்திற்காக, நாட்டு மக்கள் க்ஷேமமுற வேண்டும் என்பதற்காகப் பலர் சந்தோஷத்துடன் ஜீவத் தியாகம் செய்தார்கள். பால் மணம் மாறாச் சிறுவன் நஞ்சப்பா, மாசு

மறுவற்ற வீரன் நஞ்சுண்டேச்வர கௌடா, ராமசாமி முதலிய தியாகிகள் முடியாட்சியின் பலி பீடத்தில் தங்கள் ஜீவனை அர்ப்பணம் செய்தார்கள். அந்தத் தியாகிகளை நான் வணங்குகிறேன். தலைவர்கள் திடீரென்று கைது செய்யப்பட்டதும் அடக்குமுறைக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்த நாட்டு மக்களை நான் பாராட்டுகிறேன். அடக்குமுறையைத் தூவென்று உமிழ்ந்து தள்ளிவிட்டு அரசியல் வேலை நிறுத்தம் செய்த கோலார் தங்க வயல் தொழிலாளர்களையும், பங்களூர் தொழிலாளர்களையும், பத்ராவதி தொழிலாளர்களையும் நான் வாழ்த்துகிறேன். பல நாட்கள் கொடுமைக்குப் பேர் போன திவான் தர்பாரை எதிர்த்துப் போராடின ரயில்வேத் தொழிலாளர்களையும் நான் பாராட்டுகிறேன். விடுதலைப் போரின் முன்னணியில் நின்ற ஹாஸன், ஷிமுகா, தாவணகிரி, பங்களூர், மைசூர் வாசிகளை நான் வாழ்த்தி வணங்குகிறேன். சுதந்திரப் போருக்குப் புதிய சோபை அளித்த மாணவர்களை நான் வாழ்த்துகிறேன், நமக்குச் சோதனை ஏற்பட்ட பொழுது நமக்குப் பக்கபலமாக நின்ற இந்திய யூனியன் மக்களுக்கு நான் வணக்கம் செலுத்துகிறேன். வெற்றி கிடைக்கும் வரை

யில் போரைத் தொடர்ந்து நடத்தின மைசூர் மக்களை நான் வாழ்த்துகிறேன்.

தலைவர்கள் சிறைப்பட்டதும் ஊர் பெயர் தெரியாத பல தியாகிகள் இயக்கத்தைத் தொடர்ந்து நடத்தினார்கள். அவர்கள் புகழை வேண்டவில்லை; பெருமையை விரும்பவில்லை. எனினும் அவர்களை நாம் மறக்க முடியாது. அவர்கள் தியாகம் சிரஞ்சீவித்வம் பெற வேண்டும். அவர்கள் ஞாபகார்த்தமாக நிர்மாணிக்கப் படும் ஞாபகச் சின்னத்திற்கு நாம் நாளைய தினம் வணக்கம் செலுத்துவோம்!''

[''சுதந்திர மைசூருக்கு ஜே!'' என்று ஜனங் கள் கோஷிக்கின்றனர்.]

....திரை....

## காட்சி 6

[ஒரு மைதானம். மைதானத்தின் மத்தியில் ஒரு சிலை. அது தான் மைசூர் சுதந்திரப் போரில் உயிர் நீத்த தியாகிகளின் ஞாபகச் சின்னம். தேசமக்கள் வாழ வேண்டும் என்பதற்காக உயிர் நீத்த இனம் தெரியாத வீரர்களுக்கு மக்கள் செலுத்தும் மரியாதையின் சின்னம் அந்தச் சிலை.

தலைவர்கள் சிலைக்கு மாலை இட்டுவிட்டுத் திரும்பும் பொழுது திரை உயருகிறது. ரவீந்திரன் மறுபக்கத்தி லிருந்து பிரவேசிக்கிறான். அவன் கையில் ஒரு மல்லிகைப் பூ மாலை இருக்கிறது.

ரவீந்திரன் தியாகச் சின்னத்தை மெதுவாக அணுகுகிறான். சிலைக்கு ஐந்து அடி தூரத்தில்

அவன் நிற்கிறான். அவன் தியாகச் சின்னத்தை உற்றுப் பார்க்கிறான். தியாகிகளின் ஞாபகச் சின்னம் அது; அவன் கமலாவின் தியாகச் சின்னம் அது.

அவன் மெதுவாகப் பையிலிருந்து கமலாவின் படத்தை எடுக்கிறான். அதை உற்றுப் பார்க்கிறான்; மீண்டும் ஞாபகச் சின்னத்தைப் பார்க்கிறான். அவன் கண்களிலிருந்து கண்ணீர் பெருகி ஓடுகிறது. ஒரு சொட்டுக் கண்ணீர் கமலாவின் போட்டோவில் விழுகிறது. அதைத் துடைத்து விட்டு அவன் போட்டோவைப் பையில் வைத்துக் கொள்ளுகிறான். பிறகு தியாகச் சின்னத்திற்கு மல்லிகைப் பூ மாலை சூட்டுகிறான்.

அதே சமயத்தில் ராமசாமி வேறு பக்கத்திலிருந்து பிரவேசித்து ரவீந்திரனுக்கு ரோஜாப் பூ மாலை சூட்டுகிறான். பிறகு ராமசாமி சொல்லுகிறான்:

“நண்ப,

உங்கள் துக்கத்தில் நானும் பங்கு கொள்ளுகிறேன். இது உங்கள் நஷ்டம் மாத்திரம் அல்ல, இது தேசத்தின் நஷ்டம்.

தேசத்திற்காக நீங்கள் ஏற்றிப் போற்றும் அனைத்தையும் நீங்கள் தியாகம் செய்தீர்கள். உங்கள் நஷ்டம் ஈடு செய்ய முடியாதது. எனினும், இதை எண்ணி வருந்துவதில் பயனில்லை. கமலாவும் மற்றவர்களும் எந்த நோக்கம் நிறைவேறுவதற்காக உயிர் நீத்தார்களோ, அந்த நோக்கம் நிறைவேறுவதற்காக நாம் இடைவிடாது பாடுபட வேண்டும். இதுதான் நாம் தியாகிகளுக்குச் செய்யும் மரியாதை.

மைசூர் புது யுகத்தில் அடி எடுத்துவைத்து விட்டது. இன்னும் நாம் வெகு தூரம் பிரயாணம் செய்யவேண்டும். மைசூர் பரிபூரண சுதந்திரத்தை நோக்கி முன்னேற வேண்டும். மைசூரைப் புனர் நிர்மாணம் செய்யவேண்டும்; கோலார் தங்கவயலைத் தேசியமாக்கவேண்டும்; தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தையும், விவசாயிகளின் வாழ்க்கை நிலையையும், ஜனங்களின் அந்தஸ்தையும் உயர்த்தவேண்டும்; குடிமக்கள் சொன்னபடி குடி வாழ்வு இங்கே ஏற்படவேண்டும். இந்த மகோன்னதமான சாதனைகளைச் சாதிப்பது நமது கடமை. இந்தக் கடமையை நிறைவேற்ற நாம் ஒன்றுபட்டுப் பாடுபடவேண்டும்.

தொழிலாளி வர்க்கத்தின் சார்பில் உங்களை நான் வாழ்த்துகிறேன்!''

ரவீந்திரன்: நண்ப, நமது வேலை மிகப் பெரிது. புதிய நிலை புதிய சந்தர்ப்பங்களை நமக்கு அளிக்கிறது. இதை நாம் தேச மக்களின் நன்மைக்காகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். எதிர் காலத்தில் நம்பிக்கையுடன் நாம் செயலாற்ற வேண்டும்.

புதிதாக ஏற்பட்டிருக்கும் ஜனங்களின் மந்திரி சபையை நாம் பலப்படுத்த வேண்டும்; அதற்குப் பக்க பலமாக நிற்க வேண்டும். பிற்போக்காளர்களின் தாக்குதலிலிருந்து நாம் ஜனங்களின் மந்திரி சபையைப் பாதுகாக்க வேண்டும். பரிபூரணமான பொறுப்பாட்சி மலர நாம் வழி செய்ய வேண்டும். திவானையும், ஜனங்களுக்குத் துரோகம் செய்யும் அதிகாரிகளையும் நீக்க வழி கோல வேண்டும். காரச்சி காங்கிரஸ் நிறைவேற்றின ஜீவாதார உரிமைத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர புதிய திட்வகுக்க வேண்டும். வாழ்க்கைக்குப் போதுமான குறைந்த பட்சக் கூலி தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டும்; அவர்கள் வேலை நிலை அபிவிருத்தி அடைய வேண்டும். விவசாயி

களின் வறிப்பளுவைக் குறைத்து, அவர்கள் வாழ்க்கை நிலையை உயர்த்த வேண்டும். குமஸ்தாக்களுக்கும், மற்றவர்களுக்கும் வாழப் போதிய சம்பளம் நிர்ணயிக்க வேண்டும். கூட்டம் கூடும் உரிமை, ஸ்தாபனம் அமைக்கும் உரிமை, முதலியன நிலை நிறுத்தப்பட வேண்டும்; பத்திரிகை சுதந்திரம் தழைக்க வேண்டும். அரசியல் நிர்ணய சபை ஜனநாயக அரசியலை வகுக்க வேண்டும். தங்கவயல் போன்ற தொழில்களைத் தேசியமாக்க வேண்டும்; பிரபுத்வ முறையை வேரறுக்க வேண்டும். இவை நமது உடனடியான வேலைகள். இந்த வேலைகளைச் செய்ய ஜனநாயக சக்திகள் அனைத்தையும் தன்னுட்கொண்ட ஒரு ஐக்கிய முன்னணி தோன்ற வேண்டும். இந்தத் துறைகளில் நாம் கவனம் செலுத்துவோம். வெற்றி மக்களுக்கு!

ராமசாமி: சுதந்திர மைசூர் நீடூழி வாழ்க!

....திரை....

ADU A

சென்னை,
1—11—47.

ஆர். ராமநாதன்

எழுதிய

# புத்தகங்கள்

| | | |
|---|---|---|
| அறிஞர் மார்க்ஸ் | ரூ. 1 | 8 |
| வீயட்-நாம் குடியரசு | 0 | 6 |
| லெனின் பிறந்தார் | 3 | 8 |
| மனிதன் | (அச்சில்) | |

மொழிபெயர்ப்பு

| | | |
|---|---|---|
| வானவில் | 5 | 0 |
| தேச விடுதலைக்காக | 2 | 4 |
| மெய்க் காதல் | 3 | 12 |
| கூலி | (அச்சில்) | |
| சுதந்திரப் பாதை | (அச்சில்) | |

1-A
2-45